ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2262/38 - 2022 ජනවාරි මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.01.13
*2262/38 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 22/2021.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/6/2020/எச்டபிள்யூ/236.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணத்தில், அம்பாந்தோட்டை மாவட்டத்தில், பெலியத்த பிரதேச செயலாளர் பிரிவில், இல. 351 - பெலியத்த நகர கிராம அலுவலர் பிரிவிலுள்ள, பெலியத்த நகர கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அதிபதி சார்பாக அம்பாந்தோட்டை மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 30.11.2021 ஆந் திகதிய கடத்திரல் வரைபட இல. 830137 இல் துண்டு இல. 139 இல் விபரிக்கப்பட்டுள்ள சுமார் 0.0328 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய ஒரு (01) காணித்துண்டின் மேலதிக விபரங்கள் பின்வருமாறு :

*01.* **துண்டு இல. 139**
காணியின் பெயர் : ஹத்போதியவத்தை; விபரம் : தோட்டம், தென்னை மரங்கள் 03 மற்றும் கலப்புப் பயிர்ச் செய்கை வாழை மரங்கள் என்பன காணப்படுகின்றன; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: விஜேசேகர பத்திரணகே பிரதீப் ஜயசாந்த (காணி எடுத்தல் சட்டம் 38(ஏ) பிரிவின் கீழ் எடுக்கப்படுகின்றது, காணி எடுத்தல் ஏற்பாடு பூர்த்தி); விஸ்தீரணம்: 0.0328 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பெலியத்த பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அலுவலர்,
பெலியத்த.

பிரதேச செயலகம்,
பெலியத்த,
2021, திசெம்பர் 16.

EOG *1 - 0138*